**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**

| **O.S. No. 277/2014** | **Date :** 30.03.2023 | **PW1** |
| --- | --- | --- |
| Name: மதியழகன் | S/o. **அபிமன்னன்** | Evidence Recorded Time: 12.26 P.M. to 1.30 P.M |

**3 முதல் 6 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் சொந்தமாக நிலம் வைத்து விவசாயம் செய்து வருகிறேன். எந்த கிராமம், எந்த சர்வே எண்ணில் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் பானாபுரம் கிராமம் முத்தாம்பட்டி, சர்வே எண் நினைவில்லை. 1ம் பிரதிவாதி சேட்டு எனக்கு தெரிந்த நபர்தான், உறவினர் இல்லை. வழக்கு சொத்து 1992-ம் ஆண்டு கிரைய பத்திரத்தின்படி 2-ம் பிரதிவாதி கமலாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் ஆகும். 2 முதல் 8 பிரதிவாதிகள் அனைவரும் ஒரே ஊரில் குடியிருந்து வருகிறார்களா அல்லது வெவ்வேறு ஊர்களில் குடியிருந்து வருகிறார்களா என்றால் சேகர், செல்வராஜ் ஆகியோர் மேச்சேரியில் குடியிருந்து வருகிறார்கள், தங்கராஜ் இறந்துவிட்டார், அவரும் மேச்சேரியில் தான் குடியிருந்தார். பொது அதிகார பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அதிகார பத்திரம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 29.06.2012-ல் எழுதப்பட்டது. அந்த பத்திரத்தில் யார் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் கமலா, ரத்தினம், செல்வராஜ், தங்கராஜ், குமார் ஆகியோர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள். பவர் பத்திரத்தில் சொத்து கமலாவிற்கு தனிப்பட்ட கிரையம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பவர் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 லக்கமிட்டவர்களின் நேரடி அனுபவ சுவாதீனத்தில் இருப்பதாக குறிப்பிடப்பட்டது தவறு என்றால் தவறுதான். 1ம் பிரதிவாதி சேட்டு எங்கு குடியிருக்கிறார் என்றால் மேச்சேரி காளிபட்டி கிராமம், சோலார் நகரில் குடியிருக்கிறார். தாவா சொத்தில் சொல்லப்பட்ட நிலம் கமலா குடியிருக்கும் ஊரில்தான் உள்ளது என்றால் சரிதான். பவர் பத்திரத்தில் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை 2 முதல் 6 பிரதிவாதிகளால் நேரடியாக பராமரிக்கமுடியவில்லை என்றும் நிர்வகிக்க முடியவில்லை என்றும் குறிப்பிட்டு காணப்படுகிறது என்றால் சரிதான். எரப்பரெட்டியூர் சொத்து உள்ள இடத்திற்கும்

சேட்டு சொத்துள்ள இடத்திற்கும் இடையில் 2 கி.மீ தூரம் தான் இருக்கும். பொது அதிகார பத்திரத்தை படித்து பார்த்துதான் கிரைய ஒப்பந்தம் போட்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கமலாவிற்கு 1992–ம் ஆண்டு கிரைய பத்திரத்தின்படி பாத்தியப்பட்டு கமலாவிற்கு ஏற்பட்ட பட்டா எண்.3144 தனிப்பட்டாவின் அடிப்படையில் பாத்தியப்பட்டதாக எழுதப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். பொது அதிகார பத்திரத்தில் காணப்படும் வாசங்கள் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் முரணாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. என் பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள வாசகங்களுக்கும் பவர் பத்திரத்தில் உள்ள வாசகங்களுக்கு வேறுபாடு காணப்படுகிறது என்றால் இல்லை. கமலா வாரிசுகளின் நேரடி அனுபவத்தில் உள்ளது என்ற வாசகம் பவர் பத்திரத்தில் உள்ளது என்றாலும் மேற்படி அதே வாசகம் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் இல்லை என்றாலும் சரிதான். கிரைய தொகையாக எவ்வளவு நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் ரூபாய் ஐந்து லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி ஐந்து லட்சம் அன்றை தேதியில் அரசு மதிப்பு என்றால் சரிதான். மார்க்கெட் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் தற்போது நினைவில்லை. அரசு மதிப்பை செண்ட் அல்லது சதுரடிக்கு நிர்ணயம் செய்தேனா என்றா்ல செண்ட்டிற்கு தான் நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு செண்ட் நிலத்தை எவ்வளவு மதிப்பு நிர்ணயிக்கப்பட்டது என்றால் ஐந்தாயிரம் நிர்ணயக்கப்பட்டது. கிரைய ஒப்பந்தப்படி எவ்வளவு காலஅவகாசம் எழுதப்பட்டது என்றால் இரண்டு வருடம் போட்டு எழுதப்பட்டது. கிரைய ஒப்பந்தம் எழுதும்போது கமலா மற்றும் அவரது வாரிசுகள் வந்தார்களா என்றால் இல்லை. கிரைய முன்பணமாக ரூபாய் நான்கு லட்சத்தை பணமாக கொடுத்தேன். ரூபாய் நான்கு லட்சத்தை 1ம் பிரதிவாதி சேட்டுவிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். கமலாவின் வாரிசுகளிடம் பணத்தை சேட்டு கொடுத்தாரா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். பணம் நான்கு லட்சம் கொடுத்தற்கு சேட்டு ரசீரை பெற்றுக்கொடுத்தாரா என்றால் இல்லை. எந்த தேதியில் பணம் கொடுத்தார்கள் என்றால் என் முன்பு வைத்து 26.11.2012–ல் பணம் கமலா மற்றும் அவரின் வாரிசுகளிடம் கொடுக்கப்பட்டது. கமலா மற்றும் அவரது வாரிசுகளிடம் பணம் கொடுத்தற்கு நான் ரசீது கேட்டேனா என்றால் இல்லை. ஒப்பந்தம் போட்டதால் அதன் பிறகு கேட்கவில்லை. அவ்வாறு பணம் எதுவும்

கொடுக்கவில்லை என்றாலும் என் முன்பு வைத்து கொடுக்கப்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. என் முன்பு வைத்துதான் 26.11.2012—ல் கமலா மற்றும் அவரது வாரிசுகளிடம் பணம் கொடுக்கப்பட்டது என்று வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னுடைய வழக்கிலும், முதல் விசாரணையிலும் மேற்படி விவரத்தை சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். மீதி கிரைய தொகையை தயார் செய்து கொண்டு கிரையம் செய்து கொடுக்க சொல்லி எப்போது கேட்டேன் என்றால் ஒருவருடம் கழித்து கேட்டேன். எந்த தேதியில் சேட்டுவிடம் கேட்டேன் என்றால் தேதி நினைவில்லை. என்னுடைய வழக்குரையிலும், அறிவிப்பிலும் எந்த தேதியில் சேட்டுவிடம் கேட்டதாக கூறியுள்ளேன் என்றால் 2014—ம் ஆண்டு கேட்டேன், தேதி, மாதம் நினைவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பை எப்போது அனுப்பினேன் என்றால் 6 வது மாதம் 2013—ம் ஆண்டு அனுப்பினேன். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பிருந்தே சேட்டுவை அடிக்கடி சென்று கிரையம் செய்து கொடுக்க சொல்லி கேட்டேனா என்றால் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். வழக்கறிஞர் அறிவிப்பில் எந்த தேதில் சார்பதிவாளர் அலுவலகம் வந்து கிரையம் செய்து கொடுக்க சொல்லி கேட்டுள்ளேன் என்றால் தேதி நினைவில்லை, 9—ம் மாதம், 2014—ம் வருடம். பொது அதிகார பத்திரத்தில் சொல்லியுள்ள தங்கராஜ் என்பவருக்கும் சேர்த்துதான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் சேர்த்துதான் அனுப்பினேன். அவர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பே இறந்துவிட்டார். அவர் இறந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இறந்த விவரம் தெரிந்துதான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் இல்லை. தங்கராஜ் இறந்த விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு திரும்ப வந்ததால் தான் எனக்கு அவர் இறந்த விவரம் தெரியும். தங்கராஜ் இறந்த பிறகு அவருடைய வாரிசுகளை உட்படுத்தி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு கிரையம் செய்து கொடுக்கவில்லை என்பதால் உடனே வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை ஊரில் பெரியவர்களை வைத்து கிரையம் செய்து கொடுக்க பேசினேன், அப்போதும் கிரையம் செய்து கொடுக்காத

காரணத்தினால் தான் வழக்கு தாக்கல் செய்தேன். அவ்வாறு ஊர் பெரியவர்கள் வைத்து எந்த தேதியில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றாலும், யார் யார் அதில் கலந்து கொண்டார்கள் என்றாலும் நினைவில்லை. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் யார் கிரையம் செய்து கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தங்கராஜ் இறந்துவிட்டதால் மற்ற வாரிசுதாரர்கள் கிரையம் செய்து கொடுக்கவேண்டும் என்று என்னுடைய அறிவிப்பில் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறுதான் சொல்லியுள்ளேன். பவர் பத்திரம் எழுதிக்கொடுப்பவர்களில் யாரேனும் ஒருவர் இறந்துவிட்டால் அந்த பவர் பத்திரம் முழுமையாக செல்லாமல் போய்விடும் என்றால் சரியல்ல. நான் பத்திர அலுவலகத்தில் காத்திருந்தது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த சொத்து குறித்து வில்லங்கத்தை எப்போது பார்த்தேன் என்றால் 17.11.2014–ல் தான் பார்த்தேன். அவ்வாறு 17.11.2014–ல் வில்லங்கம் பார்த்தற்கான வில்லங்க சான்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தங்கராசின் வாரிசுகளை உட்படுத்தி பொது அதிகார பத்திரத்தை சேட்டு எழுதி வாங்கினாரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி நான் அனுப்பிய அறிப்பை பெற்றுக்கொண்டாரா என்றால் பெற்றுக்கொண்டார். பதில் அறிவிப்பு கொடுத்தாரா என்றால் இல்லை. 17.11.2014–ல் வில்லங்கம் பார்த்தபோது வில்லங்கத்தில் என்ன இருந்தது என்றால் தாமரை செல்வன் பெயரில் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கப்பட்டிருந்தது. மேற்படி ஒரு பதிவுதான் வில்லங்கத்தில் இருந்ததா என்றால் இருந்தது. வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் கிரைய பத்திரம் எனக்கு எழுதி தரவேண்டும் என்றும், எனக்கு கிரைய பத்திரம் எழுதி தரும் வரை யாருக்கும் சொத்தை விற்பனை செய்யக்கூடாது என்று கேட்டுள்ளேன். எதற்காக வழக்கு தாக்கல் செய்தேன் என்று தெரியாமலேயே நான் சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 பத்திரம் என்ன பத்திரம் என்றால் பொது அதிகார ரத்து பத்திரம் ஆகும். அது எப்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் 18.12.2012–ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது ஆகும். 1ம் பிரதிவாதி எனக்கு கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்து எப்போது பவர் பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் 22 நாட்கள் இருக்கும். பவர் ரத்து பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். பவர் பத்திரத்தை ரத்து

செய்து 18 மாதங்கள் பிறகுதான் நான் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய ஒப்பந்த பத்திரத்தில் 2ம் பக்கத்தில் 2ம் பத்தியில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் சேட்டுவைதான் குறிப்பிடும் என்றால் சரியல்ல, அனைத்து வாரிசுகளையும் சேர்த்துதான் குறிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சாயத்து பேசியதில் 2 முதல் 8 பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை என்று கூறியுள்ளேன், அது சம்மந்தமாக ஆவணங்கள் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.